**திஹகொட பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திஹகொட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 404,347 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டது. |
| (ii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 68,250 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டது. |
| (iii) | மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் நவீனமயப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,263,981 இற்கான செலவுகளை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களையும் கணக்கீடு செய்ய வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கடந்த ஆண்டு லங்காதிலக முன்பள்ளி கட்டிடத்தை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யும் போது குறைவாகக் கணக்கீடு செய்திருந்த ரூபா 81,995 தொகை மீளாய்வாண்டின் போதும், சரி செய்திருக்க வில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களை யும் கணக்கீடு செய்ய வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டது. |
| (v) | மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டி ருக்காத நிர்மாண வேலை ஒன்று தொடர்பாக செலுத்த வேண்டிய செலவு என ரூபா 49,937 தொகைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டது. |
| (vi) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 618,301 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டது. |
| (vii) | மீளாய்வாண்டு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 97,686 தொகைக்காக குறைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்பட்டது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 64,913,282 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 1,104,535 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதி களில் வித்தி யாசங்கள் இணக்கஞ் செய்து கணக் குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 இறுதிக் கணக்கு களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,735,636 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த கணக்கு விடயங்களுக்கான பதிவேடுகள் நாளது வரை ஆக்கப்பட்டு தேவையான சரிசெய்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்ட பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,791,829 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,260,925 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,180,500 | 569,715 | 544,915 | 272,365 | 1,088,000 | 372,456 | 310,624 | 247,565 |
| வாடகை | 2,710,000 | 3,023,800 | 3,024,050 | 236,254 | 4,027,000 | 290,075 | 315,410 | 236,504 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 815,800 | 882,251 | 901,671 | 5,510 | 776,800 | 881,911 | 866,442 | 24,930 |
| ஏனைய வருமானங்கள் | 17,264,750 | 12,541,886 | 13,910,800 | 8,710,000 | 22,310,750 | 12,861,134 | 14,320,961 | 10,078,914 |
| மொத்தம் | 23,971,050 | 17,017,652 | 18,381,436 | 9,224,129 | 28,202,550 | 14,055,576 | 15,813,437 | 10,587,913 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு மொத்த வருமானம் ரூபா 23,971,050 தொகையாக இருந்ததுடன் நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 17,017,652 ஆகும். ரூபா 10,587,913 தொகை ஆரம்ப நிலுவையுடன் ரூபா 27,605,565 அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 18,381,436 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் மொத்த நிலுவை ரூபா 9,224,129 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ரூபா 9,224,129 இற்கான மீதியில் பில்போடப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 8,400,000 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 300,000 தொகையாகக் காணப்பட்டதுடன் மீதியாகிய ரூபா 524,129 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக தற்போது விஷேட நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |

### 2.2.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 211,504 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 951,125 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,162,629 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 939,375 தொகை ஆக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 223,254 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. அறவீடுகளின் முன்னேற்றம் 81 சதவீதமாகும். | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | மொத்த சிட்டையிடல்களை அறவீடு செய்வதற்கு விஷேட நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்துவதுடன், கொடுப்பனவு மேற்கொள்ளாதவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். |

### 2.2.4 நீர்க் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை மீதி ரூபா 234,359 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 338,614 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 572,973 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 314,643 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 258,330 தொகை நிலுவை ஒன்று காணப்பட்டது. அறவீடுகளின் முன்னேற்றம் 55 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான சிட்டையிடப் பட்ட மொத்தத் தொகையை அறவீடு செய்வதற்கும் முன்னைய ஆண்டு முதல் காணப்படும் நிலுவை மீதிகளைத் தீர்ப்பதற்கு நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 600,000 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 16,800,000 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அனுப்புமாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் எழுத்துமூலம் விண்ணப்பித்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

**நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற் கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் குறிக்கோள் நெருங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். | 2019 ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்திக்கான பல்வேறு செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 3/2017 இலக்கம் மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களிலும் விரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரம் பாவணையின் மூலம் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டு மெனினும் சபையினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 மே 15 ஆம் திகதி முதல் விரல் அடையாள இயந்திரம் சபையில் செயற்படுத்தவதற்காக அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 02 மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப் படுத்துவதற்கு மற்றும் வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவி களில் காணப்பட்ட 05 வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன் மிகை பதவி 02 இற்கான அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 03 திகதிய 209 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் 4.5 சதுர கிலோ மீற்றர்கள் முன்னேற்ற பகுதிகள் என வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2019 பெப்ரவரி 08 திகதி வரை ஆதனங்களின் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தமானி யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 22 திகதி வீதவரி பெறுமதி மதிப்பீடு அலுவல்களுக்காக சமூகமளிப்பதாக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திஹகொட பிரதேச சபையின் பொது சந்தை நடாத்தப்படும் காணியை உரித்தாக்குவதற்கு ஆரம்ப பெறுமதி மதிப்பீட்டுத் தொகையாக ரூபா 5,650,000 தொகை 2012 ஏப்ரல் 26 ஆம் திகதி திஹகொட பிரதேச செயலாளருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2019 பெப்ரவரி 08 திகதி வரை சந்தை காணியை சபைக்கு உரித்தாக்கியிருக்க வில்லை. | உரித்தாக்கல் விரைவாக மேற்கொள்ளப் பட வேண்டும் | திஹகொட பொதுச் சந்தை அமைந்துள்ள காணியை அரசுக்கு உரித்தாக்குவது தொடர்பாக எதிர்ப்பு ஒன்று இல்லை என அறிவித்து உள்ளூராட்சி ஆணையாள ரினால் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுச் செயலாளருக்கு 2019 மார்ச் 19 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்திருந்தார். |

## 3.5 கருத்து முரண்பாட்டுத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 02 திகதிய தென் மாகாண சபையின் அமைச்சரவை தீர்மான இலக்கம் 781 இன் பிரகாரம் 2017 அக்தோபர் 24 திகதிய தென் மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் CSS/03/12/19 கொண்ட கடிதம் மற்றும் 2017 அக்தோபர் 24 ஆம் திகதிய தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 03/03/ சபா/பொது/2017 இலக்க கடிதத்தின் பிரகாரம் தேக்க வாகனங்களுக்காக மூன்றாம் தரப்பினருக்காக காப்புறுதி உள்ளடக்கம் பெற்றுக்கொள்ள வேண்டு மெனினும், மீளாய்வாண்டு ஆகஸ்ட் 14 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 இன் பிரகாரம் சபைக்கு சொந்தமான இரண்டு வாகனங்களுக்காக முழுமையான காப்புறுதி உள்ளடக்கம் பெறப்பட்டிருந்தது. | கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2018 ஆகஸ்ட் 14 திகதி நடைபெற்ற பொதுக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் முழுமையான காப்புறுதி உள்ளடக்கம் ஒன்று பெற்றிருந்தது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 11,856,801 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 15 சதவீதம் முதல் 76 சதவீதம் வரை யான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 05 வருமான விடயங்களினை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 93,101 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதி 22 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |